[1993 மார்ச் 16

87--

குளித்தலை - கொசூர் நகரப் பேருந்து விடல்

*9823–திரு. ஆ. அறிவழகன் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டத்தில் குளித்தலை - கொசூர் (வழி-கணக்குபிள்ளையூர், சின்னகுளத்தூர்) நகரப் பேருந்து விடப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : திருச்சிராப்பள்ளி மாவட்டம், குளித்தலை வட்டம் குளித்தலை-கொசூர் (வழி) கணக்குபிள்ளையூர், சின்னக்குளத்தூர் வழித்தடத்தில் 30-7-92 முதல் தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகத்தின் நகர பேருந்து ஒன்றின் மூலம் ஆறு நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன.

திரு. ஆ. அறிவழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கோரிக்கையை ஏற்று, இந்த வழித்தடத்தில் கடந்த 6 மாத காலமாக பேருந்து விடப்பட்டு இருப்பதால் என் சார்பாகவும், என்னுடைய தொகுதி மக்கள் சார்பாகவும், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 88, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர்.

88--

பரமக்குடி தொகுதியில் கூட்டுறவு நூற்பாலை ஆரம்பித்தல்.

*10749–டாக்டர் எஸ். சுந்தரராஜ் :